1990 ஏப்ரல் 16]

9-40 மணி

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மாநில அரசுக்குக் கட்டுப்பட்டதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழேதான் இந்து சமய அற நிலையத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது.

பழனி கோவில் விரிவாக்கம்

*3531 திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1975-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ரூ. 40 இலட்சம் செலவிலான பழனி கோவில் விரிவாக்கத் திட்டம் செயல் படுத்தப்பட்டதா ?

(ஆ) இல்லையெனில், அது செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே,

(அ) 1975ஆம் ஆண்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் விரிவாக்கத் திட்டத்திற்கு ரூ. 41,70 இலட்சம் செலவில் 9 திட்டங்கள் வகுக்கப்பட்டன. இத்திட்டங் களில், மேல்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி ரூ. 1.20 இலட்சத் திலும், வடக்கு, தெற்கு வெளிப்பிரகாரம் விரிவாக்கத் திட்டம் ரூ. 5 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டன. மற்ற 7 திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று கைவிடப்பட்டன.

(ஆ) கைவிடப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆய்வு செய்து, 7 நிலை ராஜகோபுரம் உட்பட அவசியம் என்று கருதப்படுபவை களை அறநிலையத் துறை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தய தி.மு.க. ஆட்சியில் பழனிமேல் மலை மீது விரிவாக்கத் திட்டம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டது. அதில் ஒரு பகுதியும் இப்போது விரிவாக்கம் செய்யப்பட்டு பணி முடிக்கப் பட்டிருக்கிறது. பாக்கி உள்ள வேலையையும் செய்து முடிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியதைப் போல, விரிவாக்கப்பட்டிருப்பது என்பது ஏற்கெனவே செய்த ஒன்று.

மேலும், நிலுவையில் உள்ள மீதமுள்ள வேலைகளையும் நிச்சய மாக முடிக்க இந்தத் துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. காளியப்பன் : மலைக்குக் கீழ்ப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புக்காரர்களை இந்து சமய அறநிலையத்துறை அகற்றி துறை சார்பாக கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : ஆக்கிரமிப்புக்காரர் கள் எங்கே இருந்தாலும் அவர்கள் அகற்றப்படுவார்கள்.

பேரையூர்-மேலப்பட்டி நெடுஞ்சாலையைச் செப்பனிடுதல்

*2074 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், பேரையூரிலிருந்து மேலப்பட்டி கிராமத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையை உடனே செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

எதிர்வரும் நிதியாண்டில் பராமரிப்பு நிதி நிலைமைக்கேற்ப இச்சாலையை மேம்பாடு செய்து நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரையை மையமாகக் கொண்டு ஹைவேஸ் சர்க்கிள்

*5928 திரு. எஸ். எஸ். தென்னரசு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையை மையமாகக் கொண்டு இராமநாதபுரம், பசும்பொன், மதுரை, காயிதேமில்லத் மாவட்டங்களை உள்ள டக்கிய ஒரு ஹைவேஸ் சர்க்கிள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.